St. Flavian
C.M.



பாமாலை 301 - என் நெஞ்சை ஸ்வாமீ உமக்கே

1 என் நெஞ்சை ஸ்வாமீ உமக்கே
ஈவாய் படைக்கிறேன்
நீர் இந்த காணிக்கையையே
கேட்டீர் என்றறிவேன்

2 அப்பா நீர் அதைத் தயவாய்
அங்கீகரிக்கவும்
நான் அதை உள்ள வண்ணமாய்
தந்தேன் அன்பாயிரும்

3 மெய்தானே அது தூய்மையும்
நற்சீரு மற்றது
அழுக்கும் தீட்டும் மாயையும்
அதில் நிரம்பிற்று

4 நான் உண்மையாய்க் குணப்பட
அதை நொறுக்குமேன்
இத்தயவை நீர் காண்பிக்க
பணிந்து கேட்கிறேன்

5. என் முழு நெஞ்சையும் அன்பாய்
நீர் ஸ்வாமீ என்றைக்கும்
அகமும் ஆலயமுமாய்
படைத்துக்கொண்டிரும்